வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் CC. No. 23/2023

வழக்கு சாட்சி – PW 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: கணேசன் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 11.06.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை** (நேரம் : காலை 11.00 மணி)

நான் இராமநாதபுரம் மாவட்டம், பனைக்குளம் அஞ்சல், சோகையன் தோப்பு கிராமத்தில் வசித்து வருகிறேன். பிட்டர் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 சிவபாலனை தெரியும். விபத்தில் இறந்துபோன கோவிந்தராஜை தெரியும். என் ஊர்க்காரர். உறவுக்காரர். கடந்த 09.08.2022 ம் தேதி மாலை 06.00 மணியளவில் பனைக்குளம் – ஒத்தபனை செல்லும் ரோட்டில் நான் எனது இருசக்கர வாகனத்தில் விபத்தில் இறந்துபோன கோவிந்தராஜை பின்னால் அமர்த்திக்கொண்டு போய்க்கொண்டிருக்கும்பொழுது பனைக்குளத்திலிருந்து அரை கி.மீ தள்ளி சென்று கொண்டிருக்கும்போது எதிரே அழகன்குளத்திலிருந்து வந்த ஒரு கார் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. அவ்வாறு மோதியதில் எனது வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டு பின்பு மருத்துவமனையில் சிகிச்சையின்போது துண்டிக்கப்பட்டுவிட்டது. இருசக்கர வாகனம் மோதியதில் நானும், பின்னால் அமர்ந்து வந்த கோவிந்தராஜும் கீழே விழுந்துவிட்டோம். அவ்வாறு கீழே விழும்போது கோவிந்தராஜுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. நான்

மயக்கமடைந்துவிட்டேன். என்னை ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல கூறினார்கள். நான் அங்கு கொண்டு செல்லப்பட்டு ஒரு மாதம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருந்தேன். கோவிந்தராஜும் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் கொண்டுவரப்பட்டு சிகிச்சையிலிருந்த அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக பின்னிட்டு கேள்விபட்டேன். எங்கள் மீது மோதிய காரின் பதிவெண் தெரியாது மற்றும் காரை ஓட்டிவந்த நபரை நான் விபத்து சமயம் பார்க்கவில்லை. விபத்து நடந்த இடத்திற்கு அருகே ரோட்டின் தெற்கே கடைகள் உள்ளது. அந்த கடைகளில் இருந்தவர்கள் விபத்தை பார்த்திருக்கலாம். விபத்து சம்மந்தமாக இறந்துபோன கோவிந்தராஜ் மகன் சிவபாலன் புகார் கொடுத்ததாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

புகாரில் என்ன விபரம் சொல்லப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை யார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

(ஒம்/– சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.